## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 388/2016</u>

நாள் 25.08.2025

PW1 – சி.விஜயகுமார்

த/பெ – சின்னச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of August 2025.)**

**(மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் வா.சா.1 சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு மீண்டும் விசாரிக்கப்பட்டார்.)**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது அப்பா சின்னச்சாமி 07.04.2011–ம் தேதியில் இறந்த போனதற்கான இறப்பு சான்று அசல் வா.சா.ஆ.6

2. எனது அப்பா சின்னச்சாமியின் வாரிசு சான்று உண்மை நகல் வா.சா.ஆ.7

மேற்படி கூடுதல் சான்றாவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாவில் கோரிய படி தீர்ப்பாக வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது அப்பா ஆடிட்டராக வேலை பார்த்து வந்தார். எனது அப்பாவிடம் வருமான வரி சம்பந்தமாக வந்த வாடிக்கையாளர்களின் விபர பட்டியல் எங்கள் வசம் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா இறந்து போன பிறகு எனது தம்பி அருண் குமார் ஆடிட்டராக தொடர்ந்து அலுவலகத்தை நடத்தி வருகிறார். 25.03.2005–ம் தேதியில் எனக்கு சுமார் 19 வயது இருந்திருக்கும். 25.03.2005–ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்ட விபரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால்

சரிதான், எனது அப்பா சொல்லி எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட விபரம் மற்றும் அதில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் மற்றும் தொகை கொடுக்கல், வாங்கல் விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது அப்பா சொல்லி தான் எனக்கு தெரியும். தாவா சொத்து சம்பந்தமாக எத்தனை முறை வழக்கறிஞர்கள் மூலம் அறிவிப்பை அனுப்பினார் என்ற விபரமும், அதற்கு 1–ம் பிரதிவாதி ஆறுமுகம் என்ன சொல்லி பதில் அனுப்பியிருந்தார் என்ற விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது அப்பா சொல்லி எனக்கு விபரம் தெரியும். அந்த வகையில் எனது அப்பா அனுப்பிய 11.12.2006–ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பிற்கு 1–ம் பிரதிவாதி 13.12.2006–ம் தேதியில் அனுப்பிய பதில் அறிவிப்பையும், அதனைத்தொடர்ந்து அனுப்பிய கூடுதல் பதில் அறிவிப்பையும் இந்த வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த 13.12.2006–ம் தேதியிட்ட பதில் அறிவிப்பில் தாவா சொத்தை பொறுத்து 1–ம் பிரதிவாதி ஆறுமுகம் அவரது மகன்களான கணேசமூர்த்தி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களுக்கு கடந்த 26.09.2005–ம் தேதியிலேயே தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டு விட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அதேபோல் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு 1–ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையிலும், மேற்படி வீதம் 26.09.2005–ம் தேதியிலேயே அவர்களுடைய மகன்களுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்து விட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

2. இந்த அசல் வழக்கு தாக்கல் செய்த போது சொத்து சம்பந்தமான வில்லங்க சான்று எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி 13.11.2007–ம் தேதியில் தாக்கல் செய்து எதிர்வழக்குரையில் 1–ம் பிரதிவாதி அவரது மகன்களுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்னிட்டு அவரது முதல் மகன் காலமாகி விட்டதால் 1–ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் 2–வது மகன் ராஜேந்திரன் ஆகியோர் ஒரு செந்தில்குமார் என்பவருக்கு 14.12.2006–ம் தேதியிலேயே கிரையம் கொடுத்து விட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் அது எனது அப்பா சொல்லி எனக்கு தெரியும். அவ்வாறு எனது அப்பா சொல்லி 15 வருடம் ஆகிறது. அதனால், அந்த 26.09.2005–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணங்கள் செல்லாது என்றும், அதன்பேரில் செந்தில்குமார் பெயருக்கு எழுதி கொடுத்துள்ள 14.12.2006–ம் தேதியிட்ட கிரைய பத்திரமும் செல்லாது என்று எனது அப்பா பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். எனது அப்பா கடந்த 07.04.2011–ம் தேதியில் இறந்து போய்விட்டார்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.08.25 15:30:22 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**